1974 ஏப்ரல் 2]

சத்தம் இல்லாமல் ஓடும் ஆட்டோ ரிக்ஷாக்கள் கொண்டு வர வேண்டுமென்று சொன்னார்கள். அப்படிப்பட்ட ஆட்டோ ரிக்ஷாக்கள் ஹைதராபாத்திலும், பெங்களூரிலும் ஓடுவதாகச் சொன்னார்கள். சத்தம் இல்லாமல் ஓடும் ஆட்டோ ரிக்ஷாவை நான் ஹைதராபாத்தில் பார்த்தது இல்லை. பெங்களூரில் போடும் சத்தம் சென்னைவரை கேட்கிறது.

காலணிகள் உற்பத்தி நிலையம், மப்பேடு

*721 வினா—திரு. ஏ. சுப்பிரமணியம்: மாண்புமிகு அற நிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊதிய உயர்வு, தனி ஈட்டுப்படி போன்ற சில கோரிக்கைகளை நிறைவேற்றித்தரும்படி கேட்டு, செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள மப்பேடு அரசினர் காலணிகள் உற்பத்தி நிலையத் தொழிலாளரிடமிருந்து இவ்வாண்டு, பிரப்ரவரி, மார்ச்சு மாதங்களில், அரசுக்கு விண்ணப்பங்கள் வந்துள்ளனவா?

(இ) ஆமெனில், அவற்றின் விவரம் யாது?

(உ) கோரிக்கைகள் குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:

(அ) ஆம்.

(இ) (1) நாட்கூலியை ஐந்து ரூபாயாக உயர்த்துதல்,

(2) இரண்டாவது ஊதியக்குழுவின் பரிந்துரைப்படி தனி ஈட்டுப்படி வழங்குதல்.

(3) பண்டிகை முன் பணம் வாங்குதல்.

(4) அரசு ஊழியர்களுக்கு அவ்வப்போது அளிக்கப்படும் பஞ்சப்படி வழங்குதல்.

(5) ஆண்டு ஒன்றிற்கு 12 நாட்கள் சம்பளத்துடன் கூடிய விடுப்பு வழங்குதல்.

இந்த நிலையம் ஆரம்பத்திலிருந்து நஷ்டத்திலேயே இருந்ததால் மூடப்பட்டுவிட்டது. அதனால் தொழிலாளர்களின் கோரிக்கைகளை கவனித்து ஆவன செய்ய தற்சமயம் வாய்ப்பு இல்லை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Mr. Speaker Sir, On a point of order, Sir, this question is about 'footwear'. How is it that the Hon. Minister for Religious Endowments is answering it?

திரு. நா. வீராசாமி: அம்மையார் அவர்களுக்கு அமைச்சர்கள் பொறுப்பேற்று இருக்கிற இலாகா கூட தெரியவில்லை. அவர் காதி அண்டு வில்லேஜ் இன்டஸ்ட்ரிசுக்கும் அமைச்சர்.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவரவர்களே, இந்த மப்பேடு கிராமம் என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அங்கேயுள்ள புட்வேர் யூனிட் வேலை செய்யாமல், அங்கேயுள்ள தொழிலாளர்கள் பல மாதமாக வேலைக்குப் போகாமல் இருக்கிறார்கள். ஆகவே, வேலைக்குத் திரும்புவதற்காக உடனடி நடவடிக்கை எடுத்து, மீண்டும் அங்கே வேலையை ஆரம்பிக்க அவர்கள் கேட்கிற கூலி உயர்வினை போட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலை 1967-68-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப நாளிலிருந்தே, மூடுகிற மூன்று நாட்களுக்கு முன்வரையில் நஷ்டத்தில் இயங்கிக்கொண்டு வந்திருக்கிறது. அதற்குக் காரணம், அந்தத் தொழிற்சாலை எங்கே இருக்கிறது என்று தெரியாத அளவுக்கு உள்ள இடத்தில் அந்தத் தொழிற்சாலையை ஆரம்பித்து விட்டார்கள். அங்கே தயாரிக்கப்பட்ட காலணிகளும் வெளியே விலைக்குப் போகாத காரணத்தால், தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய நியாயமான கூலியைக் கூட நம்மால் கொடுக்க முடியவில்லை. தொடர்ந்து நடத்தினால், நஷ்டத்தில் தான் இயங்கும் என்ற காரணத்தை வைத்து கடந்த 3 நாட்களுக்கு முன்னால் அந்தத் தொழிற்சாலையை மூடிவிட்டோம்.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவரவர்களே, அந்தத் தொழிற்சாலை நஷ்டத்தில் ஓடுகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தத் தொழிற்சாலையை மூடிவிட்டால் பரவாயில்லை, அங்கே வேலைசெய்கிற 30 தொழிலாளர்களுக்கும் மாற்று வேலை தருவதற்கு உடனடியாக அரசு ஆவன செய்யுமா?

1974 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலையில் பணியாற்றிக்கொண்டிருந்தவர்களுக்கு அங்கே எந்தவிதமான வேலையும் கிடைக்காத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். மற்ற தொழிற்சாலைகளில்—அந்தத் துறையில் உள்ளவற்றில்—வேலைவாய்ப்பு ஏற்படுகிற நோத்தில் அதுபற்றி கவனிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்விகள்

(அ) ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு துணை வினாக்கள் கேட்க போதிய வாய்ப்பு கொடுக்கப்படவில்லை என்பது குறித்து.

(முற்பகல் 10-00)

திரு. நா. வீராசாமி: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, ஆளும் கட்சியில் இருப்பவர்கள் பல முறை உங்களுடைய கவனத்தை ஈர்ப்பதற்கு கையை தூக்குகிறோம். கேள்வி நேரத்தில் உள்ளபடியே எங்களுக்கு ஒரு கோட்டா சிஸ்டம் வைத்திருக்கிறீர்களா என்பது சந்தேகமாக இருக்கிறது. எவ்வளவு கையை தூக்கினாலும், காகிதத்தை அசைத்தாலும், உங்களுடைய கவனத்தை ஈர்ப்பதற்கு முடியவில்லை. எந்த அடிப்படையில் நீங்கள் துணைக் கேள்விகளை ஒதுக்குகிறீர்கள்? ஆளும் கட்சியினருக்கு எவ்வளவு ஒதுக்குகிறீர்கள், எதிர்க்கட்சியினருக்கு எவ்வளவு ஒதுக்குகிறீர்கள் என்று தயவு செய்து தெரிவித்தால் நலமாக இருக்கும். ஆளும் கட்சியினர்கள் புறக்கணிக்கப்படுகிறோம்.

திரு. க. உரோ. எட்மண்ட்: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய வீராசாமி அவர்கள் சில குறைகளைச் சொல்லி ஒரு ஒழுங்குப் பிரச்னையை கிளப்பியிருக்கிறார்கள். இந்த மன்றத்தில் நடைமுறைகள் நடக்கும்பொழுது, சபாநாயகர் எந்த விதத்தில் இந்த மன்றத்தை நடத்துகிறார்களோ, அந்த விதத்திற்கு நாங்கள் கட்டுப்பட்டவர்களாவோம். ஆனால், சட்டத்திற்குப் புறம்பாக நீங்கள் இந்த மன்றத்தை நடத்தினால்